



# Voice of Jagadguru


advaitam paramanandam — an e-magazine on advaita




## ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

## அருள் மொழிகள்



பக்தர்களுக்கு கிருபை புரிய பகவான் எடுத்துக்கொண்ட உருவங்களில் சிவபெருமானுடையதும் ஒன்றாகும். இந்த உருவத்தை கைவல்ய உபநிஷத் இவ்வாறு வர்ணிக்கிறது . உண்ட விஷம் நீலமாய் கழுத்தில் படர்ந்திருப்பவரும் பரம சாந்தியுடன் தோற்றமளிப்பவரும் உமாதேவியின் பதியும் அனைத்து சராசரங்களுக்கும் மூலமாகவும் சாட்சியாகவும் உள்ள பரமேஸ்வர பெருமானை தியானித்து ஞானி இருளை கடக்கிறான். திரிபுராஸூரன் அந்தகாஸூரன் மற்றும் பல அரக்கர்களை கொன்று பரம சிவபெருமான் உலகத்தை காப்பாற்றி லோக க்ஷேமத்தை உறுதிப்படுத்தினார். சிவபெருமானை ஸ்ரீ சங்கர பகவத்பாதர் பின்வருமாறு விவரித்தார். மோக்ஷம் பெற வேண்டுமெனில் பிறைச் சந்திரனையும் கங்காதேவியையும் தலையில் சூடியிருப்பவரும் மன்மதனை அழித்தவரும் நாகங்களை கழுத்து மற்றும் காதுகள் மீது அணிகலன்களாக கொண்டவரும் அக்னியென ஜ்வலிக்கும் கண்களையுடையவரும் யானையின் சருமத்தாலான உடையை அணிபவரும் மூலகங்களின் சாரமாக விளங்கும் சிவபெருமானை துதிக்க வேண்டும். மற்ற செயல்களால் என்ன பயன்?

சிவபெருமானை நினைத்தாலே பாவங்கள் அகன்று புண்ணியம் என்பது நிலைக்கும். சான்றாக கூறப்பட்டிருப்பதாவது. சிவபெருமானை வழிபட என் நேரமும் நல்ல நேரமே! ஆனால் மஹா சிவராத்திரிக்கு சாஸ்திரங்கள் தனி முக்கியத்துவம் அளிக்கின்றன. அன்று இரவு முழுவதும் விழித்திருக்கிறவருக்கு பரமபதம் கிட்டும்.

சிவபெருமானுக்கான அனேக திவ்ய க்ஷேத்ரங்கள் உள்ளன. எல்லாவற்றிலும் பெருமான் எழுந்தருளியிருக்கிறார். மஹாசிவராத்திரியான புண்ணிய தினத்தில் ஒவ்வொரு பக்தனும் கூடிய மட்டும் இந்த ஏதாவது ஒரு புண்ணிய ஸ்தலங்களுக்கு செல்ல வேண்டும். இல்லையெனில் வீட்டிலாவது பெரும் பக்தியுடனும் சிவபெருமானை பூஜிக்க வேண்டும். தன் க்ஷேமமத்துக்காக ஒவ்வொரு பக்தனும் இதை கடைபிடிப்பது மிகவும் முக்கியமாகும்.

—ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹா ஸ்வாமிகள்

Voice of Jagadguru
advaitam paramanandam
an e-magazine on advaita

## ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

# விதுர நீதி

न राज्यं प्राप्तमित्येव वर्तित व्यमनाम्प्रतम् । श्रियं हयविनयोइन्ति जगरूपमिवोत्तमम् ॥ ६२ ॥
ந ராஜ்யம்’ ப்ராப்தமித்யேவ வர்தித வ்யமனாம்ப்ரதம் |
ஶ்ரியம்’ ஹ்யவினயோஇந்தி ஜக³ரூபமிவோத்தமம் || 62 ||



இராஜ்யம் கிடைத்துவிட்டதென கர்வம் கொண்டிருந்தால், கிழத்தனமானது எப்படி சிறந்த அழகை அழிக்குமோ, அது போல இந்த அஹங்காரமானது இராஜ்யத்தை அழித்துவிடும்.

धच्छक्यं ग्रसितुं ग्रस्यं ग्रस्तं परिणमेच्चयत् ।
हितं च परिणामेयत् तदाद्यंभूतिमिच्छता || ६३ ||
த⁴ச்ச²க்யம்’ க்³ரஸிதும்’ க்³ரஸ்யம்’ க்³ரஸ்தம்’
பரிணமேச்சயத் |
ஹிதம்’ ச பரிணாமேயத் ததா³த்³யம்பூ⁴திமிச்ச²தா || 63 ||


க்ஷேமத்தைக் கோறுகிற ஒருவன் எதைச் சாப்பிடமுடியுமோ, அதைச் சாப்பிட வேண்டும். ஆனால் சாப்பிட்ட பிறகு அது செரிக்க வேண்டும். செரித்த பிறகு அது நன்மையைச் செய்ய வேண்டும். அப்படிப்பட்ட ஆகாரத்தைத் தான் அவன் உட்கொள்ள வேண்டும்.

यथामधु नमादत्ते रक्षन् पुष्पाणि षट्पदः । तद्वदर्थान्मनुष्येभ्यः आदद्यादबिहिंसया || ६४ ||
யதா²மது⁴ நமாத³த்தே ரக்ஷன் புஷ்பாணி ஷட்பத³: .
தத்³வத³ர்தா²ன்மனுஷ்யேப்⁴ய: ஆத³த்³யாத³பி³ஹிம்’ஸயா || 64 ||

அரசன் பிரஜைகளை ஹிம்ஸிக்காமல் எவ்வாறு தேன் பூச்சியானது புஷ்பங்களுக்கு தீங்கு வராமல் தேனை எடுத்து வருகிறதோ, அதுபோல வரியை வசூல் செய்ய வேண்டும்.

पुष्पं पुष्पं विचिन्वीत मूलच्छेदं न कारयेत् । माळाकारहवारामे नयथांगारकारकः || ६५ ||
புஷ்பம்’ புஷ்பம்’ விசின்வீத மூலச்சே²த³ம்’ ந காரயேத் . மாளாகாரஹவாராமே
நயதா²ங்கா³ரகாரக: || 65 ||


பூத்தோட்டத்தில் மாலை கட்டுகிறவன், மரங்களிலுள்ள புஷ்பங்களை எடுப்பானே தவிர கரி சுடுகிறவன் மரத்தை அடியோடு வெட்டுவது போல் வெட்டுவதில்லை. அதேபோல் மன்னனானவன் மனிதர்களை அடியோடு கஷ்டப்படுத்தி வரி வாங்காமல் சிறிது சிறிதாக வரி வாங்க வேண்டும்.
(தொடரும்....)



# Voice of Jagadguru

advaitam paramanandam

an e-magazine on advaita



ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

## ஆசார்யாளின் உபதேசங்கள்

(தக்ஷிணாம்னாய சிருங்கேரி ஸ்ரீ சாரதா பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ மஹாஸந்நிதானம் ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாசஸ்வாமிகள் அருளியது)

## 11. இறைவனின் தரிசனம் எப்போது கிடைக்கும்?

சரதிந்து விகாஸிமந்தஹாஸாம் ஸ்புரதிந்தீவரலோசனாபிராமாம் |
அரவிந்த ஸமான ஸுந்தராஸ்யாம் அரவிந்தாஸன ஸுந்தரீ முபாஸே ||

மனிதர்கள் எவ்வளவோ விதமானவர்களாக இருக்கிறார்கள். சிலர் பணக்காரர்கள்; வேறு சிலரோ ஏழைகள்; சிலர் படித்தவர்கள். படிக்காதவர்கள் பலர் உள்ளனர். சிலர் அழகாய் இருக்கின்றனர். சிலரோ அழகற்று இருக்கின்றனர். இப்படிப் பலவிதமான மனிதர்கள் இருப்பினும், அனைவருக்கும் பொதுவான ஒரு விஷயம் இருக்கிறது. "நாம் சுகமாக இருக்க வேண்டும்" என்ற எண்ணமே அது. ஒரு திருடன் திருடுவதற்குக் காரணம் ஒரேயடியாகப் பணக்காரன் ஆகிவிட வேண்டும் என்று அவன் நினைப்பதால்தான். தான் எப்போதும் சுகமாக இருக்க வேண்டும் என்ற எண்ணத்தினால்தான் அவன் திருட்டுத் தொழிலில் இறங்குகிறான். ஆனால், அது தவறான வழியாதலால் கடைசியில் அவன் தண்டனை அனுபவிக்க நேரிடுகிறது. ஆகவே ஜனங்கள் எவ்வளவு வித்யாஸமானவர்களாக இருந்தாலும், தான் சுகமாக இருக்க வேண்டும் என்ற ஆசை மட்டும் எல்லோருக்கும் சமான்யமாக இருக்கிறது. ஆகவேதான் பிரபஞ்சத்தில் ஒருவனுக்கு மிகவும் பிரியமான வஸ்து எது என்று கேட்டால் "நான்" என்பதுதான் பதில். தன்னை விட (ஆத்மாவை விட) பிரியமான வஸ்து ஒருவனுக்கு வேறெதுவுமேயில்லை. ஆத்மாவிற்கு பரம சுகம் எதனால் உண்டாகும்? நன்கு சாப்பிட்டால் பரம சுகம் உண்டாகுமா? அல்லது சங்கீதக் கச்சேரிக்குச் சென்றால் பரம சுகம் உண்டாகுமா? இவற்றால் நிச்சயமாக உண்டாகாது. வயிறு புடைக்க சாப்பாடு சாப்பிட்டால் அந்த சமயத்திற்கு நன்றாக இருக்கும். சிறிது நேரத்திற்குள் வயிற்றுவலியோ தலைவலியோ அல்லது வேறு ஏதாவது வலியோ வந்து டாக்டர் வீட்டுக்குப் போக வேண்டிய நிலை ஏற்பட்டுவிடும். "என்ன, இப்படியாகிவிட்டதே" என்று கேட்டால், "இதுதான் சார் உலகம்" என்று கூறிவிடுவார்கள். பெரிய சங்கீதக் கச்சேரிக்காக ரூ. 100 அல்லது ரூ.200 கொடுத்துப் போவோம். சிறிது நேரம் கச்சேரி கேட்டவுடன், "வெளியில் போய்விடலாமே" என்று தோன்றும்.இதுபோல் எல்லா லௌகிக விஷயங்களும் ஆரம்பத்தில் சுவாரஸ்யமாக இருப்பவை போலத் தோன்றும். கடைசியில் அவை அனைத்தும் நாம் வெறுக்கும் நிலைக்கு வந்துவிடும். ஆகவே லௌகிக விஷயங்களினால் நமக்கு சுகம் உண்டாகப் போகிறது என்ற நினைப்பு தவறு.

## ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)



புலன் விஷயங்களைத் துறப்பதில் தான் சுகமே இருக்கிறது. உலக விஷயங்களில் பற்று வைத்து அவற்றைப் பிடித்துக் கொண்டிருக்கும் வரையில், எவ்வளவுக்குப் பற்று வைக்கிறோமோ அவ்வளவிற்கு "அவை வேண்டாம்" என்றே தோன்றும். ஆகவே, ஆரம்பத்திலிருந்தே லௌகிக விஷயங்களில் பற்று வைக்காமல் இருந்தால் ஏமாற்றமோ துக்கமோ நேரிடாது. லௌகிக விஷயங்களை அனுபவிக்க வேண்டும் என்பதிலேயே மனதைச் செலுத்தாமல் பகவத் விஷயத்தில் கவனம் செலுத்த வேண்டும். அப்போதுதான் சுகம் உண்டாகும் என்று நம் முன்னோர்கள் அறிவுரை கூறியுள்ளனர். இந்த இடத்தில் நாம் ஒன்றை ஞாபகம் வைத்துக் கொள்ள வேண்டும். ஸகல உலகையும் வழி நடத்துபவனான ஈச்வரன் ஒருவன் இருக்கிறான் என்பதே அது. இதனை நாம் மறந்து விட்டால் நாம் பெரும் பாபம் செய்தவர்களாகிவிடுவோம். சிலருக்கு இவ்விஷயத்தில் சில பிரச்சினைகள். "ஏன் இறைவன் நம் கண்ணுக்கு முன் தோன்றுவதில்லை? எப்படி அனுக்ரஹம் செய்கிறான் இறைவன்? ஒன்றும் புரியவில்லையே. நாம் வேலை செய்கிறோம். அதற்குப் பலன் கிடைக்கிறது. நடுவில் இறைவன் என்பவன் என்ன செய்ய வேண்டியிருக்கிறது?" என்றெல்லாம் தோன்றும்.

(தொடரும் …..) For free e magazines : Our Mail ID : Info@voiceofjagadguru.com

ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

## என்றும் புதியவர்

### ஜகத்குரு சங்கராசார்யார் ஸ்ரீமத் அபிநவ வித்யா தீர்த்த மஹாஸ்வாமிகள்

### 2. பேரறிவு (மஹாப்ரக்ஞை)

### மஹாப்ரக்ஞை - கற்றறிந்த பண்டிதர்

ஹைதராபாத் ஸ்ரீ வீரேசுவர சாஸ்திரி, பம்பாய் ஸ்ரீ T.S. ஸ்ரீநிவாஸ சாஸ்திரி, பங்களூர் ஸ்ரீ P. K. சங்கர சாஸ்திரி, கொச்சி ஸ்ரீ ராமன் வாரியர், உஜ்ஜயினி ஸ்ரீ அநந்தராம சாஸ்திரி, திருப்பூணித்துறை ஸ்ரீ ராமன் நம்பியார், பங்களூர் ஸ்ரீ M. லக்ஷ்மீ நரஸிம்ம சாஸ்திரி, டெல்லி ஸ்ரீ அனந்தகிருஷ்ண சாஸ்திரி, பங்களூர் ஸ்ரீ அனந்த மூர்த்தி சாஸ்திரி, தும்கூர் விசுவநாத சாஸ்திரிகள், பங்களூர் ஸ்ரீ கிருஷ்ண ஜோய்ஸ், கொச்சி அச்யுத பொதுவாள், விநாயக சாஸ்திரிகள், தயாசங்கர வாஜபேயி, குந்தாபட்டர், காசி கமலகாந்த மிச்ரா, ராமப்ரசாத் த்ரிபாடி, காசி ஹிந்து யுனிவர்சிடி கஜாநந சாஸ்திரி, கல்கத்தா யுனிவர்சிடி ஸ்ரீவத்ஸலாஞ்சந பட்டாசார்யர், மதுஸூதன பட்டாசார்யர், விச்வபந்து பட்டாசார்யர், காசி ராமதேவ் த்ரிபாடி, சிருகுமணி ஸ்ரீ S. V. சுப்ரமண்ய சாஸ்திரிகள், மைசூர் ஸ்ரீ K. ராமசந்த்ர ஸோமயாஜி, காசி ஸ்ரீ V.S. ராமசந்த்ர சாஸ்திரிகள் முதலான பண்டிதர்கள் ஒவ்வொருவரும் அந்தந்த சாஸ்திரங்களில் பூர்வபக்ஷ சித்தாந்த விசாரம் செய்தார்கள்.... ஒவ்வொரு நாளும் ஸ்ரீ மஹாஸந்நிதானம் அத்யக்ஷராயிருந்து சீரிய முறையில் சபையை நிர்வஹித்து நடத்தியதும் பல சமயங்களில் விசாரிக்கப்படும் விஷயங்களை மிகத்தெளிவாக விளக்கியதும் பண்டிதர்களுக்கு உத்ஸாகத்தையும் பரமாநந்தத்தையும் கொடுத்தது ..."

1966ம் ஆண்டு டிசம்பர் மாதம் புதுதில்லியில் நடந்த வித்வத் ஸபையைப் பற்றி ஸ்ரீ சங்கர க்ருபா இதழில் கீழ்க்காணும் குறிப்பு உள்ளது: "... ஸ்ரீ சங்கர வித்யா கேந்திரத்தின் ஆதரவில் புதுதில்லியில் ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி ராவ் மாளிகையில் பெரிய வித்வத் ஸதஸ் சிருங்கேரி ஜகத்குரு அவர்கள் ஆசியால் டிஸம்பர் 14 முதல் மூன்று நாட்கள் மிகச் சிறப்பாக நடைபெற்றது. தில்லியிலுள்ள முப்பது வித்வான்களும் நாட்டின் மற்ற இடங்களிலிருந்து வந்த பதினேழு வித்வான்களும் இதில் பங்கு எடுத்துக் கொண்டனர், பிரமுகர்களாகத் திகழ்ந்தவர்களில் தில்லி மஹாமஹோபாத்யாய பரமேச்வராநந்த சாஸ்திரி, பஞ்சாபிலிருந்து வந்த சாருதேவ சாஸ்திரி, மைஸூர் ராமசந்திரார்யார், அஸ்ஸாம் V.C. கோஸ்வாமி, உதயபுரி Dr. R. C. த்விவேதி, அயோத்யா ருத்ரப்ரஸாத் அவஸ்தி, தில்லி Dr. R. C. பாண்டே, பீஹார் பண்டித மணிநாத ஜா முதலியோர்களைக் குறிப்பிடலாம். ‘உண்மை நன்கு வெளிப்படும் ரீதியில் விவாதம் அமையவேண்டும். பிறரை ஜயிக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு மட்டும் வியவஹாரம் செய்வது உசிதமில்லை' என்று ஸம்ஸ்க்ருதத்தில் உபதேசித்து ஸ்ரீ ஜகத்குரு ஸதஸைத் துவக்கி வைத்தார்கள். நியாயம்,



## ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

வியாகரணம், மீமாம்ஸை, வேதாந்தம், ஆகிய சாஸ்திரங்களில் சர்ச்சைகள் நடந்தன. 'வேதம் அபௌருஷேயம்', 'ஆத்மா ஒன்றே' என்ற விஷயங்கள் நன்கு விசாரிக்கப் பட்டன....". 1967ம் ஆண்டு தில்லியில் சங்கர ஜயந்தியை முன்னிட்டு நடந்த ஸபையைப் பற்றிய குறிப்பு கீழே: "... (புதுதில்லியில்) மாபெரும் நிகழ்ச்சிகள் இரண்டு. அவை மே 10 முதல் 14 வரை வெற்றிகரமாக நடந்த சங்கர ஜயந்தியும் வித்வத்ஸதஸ்ஸும். நாட்டின் பல பகுதிகளிலிருந்து கூடிய வ்யுத்பன்னர்கள் அவர்கள் உத்ஸாகத்தில் தில்லி உஷ்ணத்தையா லக்ஷியம் செய்வார்கள்! தினம் ஒருவர் ஊக்கத்துடன் பூர்வபக்ஷம் சொல்ல, மற்றும் சிலர் சாதுர்யமாகச் சர்ச்சை செய்து ஸித்தாந்தத்தை ஸ்தாபித்தார்கள். சர்ச்சையின் இறுதியில், அது வியாகரணமோ, அத்வைத ஸித்தாந்தமோ, வேதம் அல்லது உபநிஷத் பாஷ்யமோ எல்லாவற்றையும் ரசமாக உபஸம்ஹாரம் செய்தார்கள் ஜகத்குரு. ..."

வித்வத் ஸபை முதலிய அவைகளில் பண்டிதர்கள் வாதப் பிரதிவாதங்களில் உற்சாகம் காட்டுவது இயல்பாயினும், ஒரு சர்ச்சையின் முக்கிய குறிக்கோள் அறிவை மேம்படுத்துவது தான் என்பதில் ஆசார்யாள் மிகவும் கவனமாக இருந்தார். தில்லியில் நடந்த ஸபையில், "உண்மை நன்கு வெளிப்படும் ரீதியில் விவாதம் அமைய வேண்டும். பிறரை ஜயிக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு மட்டும் வியவஹாரம் செய்வது உசிதமில்லை" என்று அவர் கூறியதை நினைவில் கொள்ள வேண்டும். இந்த விஷயத்தைக் கீழே பதிவு செய்யபடும் நிகழ்விலிருந்தும் அறிகிறோம்: 'நியாய சாஸ்திரத்தில் வல்லவரான கொச்சி மஹாராஜாவுக்கு ஒரு சமயம், அந்த சாஸ்திரத்தில் ஒரு ஐயம் எழுந்தது. அவருடைய ஐயத்தை ஒரு கடிதத்தில் எழுதி ஒரு பண்டிதர் மூலமாக ஆசார்யாளிடம் தெரிவித்தார். அச்சமயம் ஆசார்யாள் தலைமையில் ஒரு வித்வத் சபை நடைபெற்றுக் கொண்டிருந்தது. ஆசார்யாள் மஹாராஜாவின் கடிதத்தை பார்த்து, அங்கே குழுமியிருந்த பண்டிதர்களில் ஒருவரை அக்கேள்வியைப் படிக்கச் சொல்லி, அந்த விஷயம் சம்பந்தமாக வாதத்தைத் துவக்கினார். ஒருவர் பின் ஒருவராக அங்கே இருந்த அறிஞர்கள் தத்தம் விளக்கங்களைக் கூறினர். ஆனால், எவருடைய விளக்கமும் ஏற்புடையதாக இல்லை; மாத்தூர் ஸ்ரீ வேங்கடேச்வர சாஸ்திரிகள் (இவர் ஸ்ரீமத் சந்த்ரசேகர பாரதீ மஹாஸ்வாமிகளிடம் தர்க்கம் பயின்று மைசூர் பல்கலைக் கழகத்தில் பேராசிரியராகப் பணியாற்றியவர்), கல்கத்தாவிலிருந்து வந்திருந்த சிறந்த பண்டிதர் ஸ்ரீ மதுஸூதன பட்டாசார்யர் முதலியவர்களின் விளக்கங்களும் மற்ற பண்டிதர்களின் ஆட்சேபணைகளினால் நிராகரிக்கப்பட்டன. இப்படி இந்த விவாதம் முடிவுக்கு வராமல் வெகு நேரம் நடைபெற்றது. அந்த சமயத்தில் ஆசார்யாள், பண்டிதர்கள் எல்லோரும் இதைப் பற்றி யோசித்து அடுத்த நாள் (அது சபை நிறைவுறும் நாள்) இந்த கேள்விக்குத் தங்கள் விடைகளுடன் வந்து மஹாராஜா எழுப்பிய ஐயத்துக்குத் தீர்வு காணவேண்டும் என்று கூறினார்.

(தொடரும்.....) மிக்க நன்றி : Centre for Brahmavidya


Voice of Jagadguru
advaitam paramanandam
an e-magazine on advaita

ஸத் ஸம்ப்ரதாயம்
An Unit of the e magazine Voice of Jagadguru)

## நீதி மஞ்ஜரீ

ஸ்ரீ ஞானானந்த பாரதீ ஸ்வாமிகள் இயற்றியது.

### அத்தியாயம் - 6

### உஷஸ்தி உபாக்யானம்

அங்கே போனதும் கானம் ஆரம்பிக்கப் போகிற ரித்விக்குகளின் ஸமீபத்தில் போய் உட்கார்ந்து கொண்டு, "ஹே. பிரஸ்தோதா பிரஸ்தாவத்திற்கு தேவதை யார் தெரியுமா? நான் ஸமீபத்தில் இருக்கும் போது அந்த தேவதையைத் தெரிந்து கொள்ளாமல் நீர் கானம் செய்வீரேயானால் உம்தலை வெடிக்கும்" என்று மிகவும் உத்தண்டமாய்ச் சொன்னார். அதைக் கேட்டதும் திடுக்கிட்டு அந்த பிரஸ்தோதா மேல் கார்யம் ஒன்றும் செய்யாமல் நிறுத்திவிட்டார். அப்படியே 'ஹே, உத்காதா, உத்கீதத்திற்குத் தேவதையார் தெரியுமா? நான் ஸமீபத்திலிருக்கும் போது அந்த தேவதையைத் தெரிந்து கொள்ளாமல் நீர் கானம் செய்தால் உம் தலை வெடிக்கும்' என்று சொல்ல, உத்காதாவும் நிறுத்தி விட்டார். பிரதிஹர்த்தாவைப் பார்த்தும், "ஹே பிரதிஹர்த்தா, பிரதிஹாரத்திற்க்கு தேவதை யார் தெரியுமா? நான் ஸமீபத்திலிருக்கும் போது அந்த தேவதையைத் தெரிந்து கொள்லாமல் நீர் கானம் செய்வீரேயானால் உம் தலை வெடிக்கும்" என்று சொல்ல அவரும் நிறுத்திவிட்டார். யாரோ ஒருவர் ராஜ ஸதஸ்ஸில் வந்து இவ்வளவு தைர்யமாய் கேள்வி கேட்டு மேல் கார்யம் நடக்கவொட்டாமல் தடுத்துவிட்டாரே. இவர் யார் என்று தெரிந்து கொள்ள வேண்டுமென்ற ஆவலுடன் மஹாராஜா "ஸ்வாமி, தாங்கள் யார் என்று அறிய விரும்புகிறேன்" என்று மிகவும் விநயத்துடன் சொன்னார். "நான் உஷஸ்தி, சக்கிரர் குமாரர்" என்று அவர் சொன்ன உடனே மஹாராஜா "ஸ்வாமி, தங்களையே எல்லா ரிதவிக் ஸ்தானங்களிலும் வரிக்க வேண்டுமென்று நினைத்துத் தங்களுக்காகப் பலவிடங்களில் தேடிப்பார்த்தேன். தாங்கள் அகப்படவில்லை. அதனால்தான் மற்றவர்களை வரிக்கும்படி ஏற்பட்டது. என் அதிருஷ்ட வசத்தினால் தாங்களே இப்பொழுது வந்து விட்டபடியால் தாங்களே எல்லா ஆர்த்விஜ்யத்தையும் ஒப்புக்கொண்டு யாகத்தைப் பூர்த்தி செய்து கொடுக்க வேண்டும்" என்று பிரார்த்தித்துக் கேட்டுக் கொண்டார். உஷஸ்தியும் "அப்படியே



செய்கிறேன். இனிமேல் இந்த ரித்விக்குகளே என்னால் அனுமதிக்கப்பட்டவர்களாக ஸ்தோத்திரம் செய்யட்டும். ஆனால் எல்லா ரித்விக்குகளுக்கும் சேர்த்து எவ்வளவு தனம் கொடுக்க உத்தேசித்திருக்கிறீரோ அதற்கு ஸமானமாய் எனக்கும் கொடுத்து விட வேண்டும்" என்று சொன்னார் ராஜாவும் அப்படியே ஸம்மதித்தார்.

இதைப் பார்த்துக் கொண்டிருந்த பிரஸ்தோதா "பிரஸ்தாவ தேவதை யார் என்று தெரியாமல் நான் பிரஸ்தாவம் செய்யும் விஷயத்தில் என் தலை வெடிக்கும் என்று தாங்கள் சொன்னீர்களே, அந்த தேவதை யார் என்று சொல்ல வேண்டும்" என்று கேட்க "ஸகல பிராணிகளும் பிரளயத்தில் பிராணனையே அடைவதாலும் உத்பத்தி காலத்தில் பிராணனிலிருந்தே வெளிக்கிளம்புவதாலும், அப்பிராணனே பிரஸ்தாவதேவதை. அந்த தேவதையைத் தெரிந்துகொள்ளாமல் பிரஸ்தாவம் செய்தால் உம் தலை வெடிக்கும் என்று நான் சொன்னபோது நீர் நிறுத்தாமல் பிரஸ்தாவம் செய்திருப்பீரேயானால் அப்படியே வெடித்திருக்கும்" என்று சொன்னார். அப்படியே உத்காதாவும் கேட்க, "ஸகல பிராணிகளும் உயர இருக்கும் ஆதித்யனையே ஸ்தோத்திரம் செய்வதால் அவரே உத்கீதத்திற்கு தேவதை" என்றும், அப்படியே பிரதிஹர்த்தாவின் கேள்வைக்குப் பதிலாக "ஸகல பிராணிகளும் அன்னத்தைக் கொண்டே ஜீவிக்கிறபடியால் அன்னமே பிரதிஹார தேவதையாகும்" என்றும் பிராணன், ஆதித்யன், அன்னம் இந்தத் தேவதைகளின் திருஷ்டியை யாகங்களில் செய்ய வேண்டுமென்று இவ்விஷேஷமான உபாஸனாக்ரமத்தை போதித்தார்.

இவ்வுபாக்கியானம் சாந்தோக்ய உபநிஷத் முதல் அத்யாயம் 10, 11 காண்டங்களில் காணப்படுகிறது. இதிலிருந்து தெரிந்து கொள்ள வேண்டிய விஷயம் மேலே கண்ட உபாஸனையின் மஹிமையாயிருந்தபோதிலும், தத்காலத்தில் யாகமே லோபத்தை அடைந்திருக்கும்போது யாகாங்க உபாஸனைகளுக்கு கொஞ்சமேனும் அவகாசமில்லை. இதைக்கொண்டு இவ்வுபநிஷத் பாகமே நமக்குப் பிரயோஜனமில்லை என்று தள்ளிவிடக்கூடியதில்லை. அவ்வுபாஸனையே முக்ய உபதேசமாயிருந்தாலும், இந்தக் கதையில் அனேகம் அவாந்திரமான உபதேசங்கள் நமக்கு உபயோகப்படக் கூடியவைகளாயிருக்கின்றன. அவைகளைத் தெரிந்து கொண்டாவது நாம் சிரேயஸ் அடையவேண்டும். அவை யாவன:

(தொடரும் ...) மிக்க நன்றி : ஸ்ரீ ஞானானந்த பாரதீ க்ரந்த ப்ரகாசன ஸமிதி

ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

## ||श्रीशारदास्तोत्रम्||

### श्रीशृङ्गाद्रौ श्रीशारदानवरात्रोत्सवसमये

## ஶ்ரீஶாரதா3ஸ்தோத்ரம்

### (ஶ்ரீ சிருங்க கிரியில் சாரதாநவராத்திரியின்போது)

(ஶ்ரீ சிருங்ககிரி ஶ்ரீ சாரதா பீடாதிபதி ஜகத்குரு ஶ்ரீ ஸச்சிதானந்த சிவாபிநவ ந்ருஸிம்ஹ பாரதீ மஹாஸ்வாமிகள் இயற்றியது)

भूताकाशचरेट्त्वमेव भुवने सिद्धं हि का तेन मे
वृद्धिश्चाभवदित्यवेत्य खगराण्णूनं गिरां देवते।
हार्दाकाशचराधिपत्यमपि मे भूयादितीच्छावशात्
तत्प्राप्त्यै तव पादपङ्कजयुगीसेवां करोत्यादरात् || ३५



பூ4தாகாஶசரேட்த்வமேவ பு4வனே ஸித்3த4ம்’ ஹி கா தேன மே
வ்ரு’த்3தி4ஶ்சாப4வதி3த்யவேத்ய க2க3ராண்ணூனம்’ கி3ராம்’ தே3வதே|
ஹார்தா3காஶசராதி4பத்யமபி மே பூ4யாதி3தீச்சா2வஶாத்
தத்ப்ராப்த்யை தவ பாத3பங்கஜயுகீ3ஸேவாம்’ கரோத்யாத3ராத் || 35

வாக்தேவியே ! உலகில் பூதங்களில் முதலான ஆகாசத்தில் ஸஞ்சரிப்பவர்களின் தலைவி நீயே என்பது அறிஞர்களின் முடிவு. வானில் ஸஞ்சரிக்கிற பறவைகளின் தலைவனான தான் (கருடன்) அந்த ஆகாசத்தாலேயே வளர்ச்சி பெற்றவன் என்பதை உணர்ந்து, ஹ்ருதய ஆகாசத்தில் ஸஞ்சரிப்பவர்களின் தலைமையும் எனக்குக் கிட்டட்டும் என்ற இச்சையால், அதனைப் பெற உன் சரண கமலங்களை ஆர்வத்துடன் வழிபடுகிறாள். (35)

विनतातनूद्भवत्वं प्रकटं प्रभवेद्विनत्यैव ।
इति बुद्ध्य खगराट् किं विनतस्त्वत्पादपद्मयोर्वाणि || ३६

வினதாதனூத்3ப4வத்வம்’ ப்ரகடம்’ ப்ரப4வேத்3வினத்யைவ .
இதி பு3த்3த்4ய க2க3ராட் கிம்’ வினதஸ்த்வத்பாத3பத்3மயோர்வாணி || 36

## ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

வாணி ! விநதியால் (பணிவால்) தான் விந்தை (பணிவுள்ள விந்தை என்ற கருடனின் தாய்)யின் புதல்வன் என்பது பிரகடனமாகும் என எண்ணி பறவைகளின் அரசனான கருடன் உன் சரண கமலங்களில் பணிந்துள்ளான். (36)




मानसविहरणशीलां देवीं त्यक्त्वान्यदेवतासेवा ।
नैवोचितेति खगराड्वहति त्वां तादृशीं नूनम् || ३७
மானஸவிஹரணஶீலாம்' தே³வீம்'
த்யக்த்வான்யதே³வதாஸேவா |
நைவோசிதேதி க²க³ராங்வஹதி த்வாம்' தாத்³ரு'ஶீம்' நூனம் || 37

மனமெனும் மானஸ ஸரஸில் விளையாடுகிற பழக்கமுள்ள தேவியை விட்டுவிட்டு மற்ற தேவதைகளை வழிபடுவது உசிதமல்ல எனக் கருதிப் பறவைகளின் அரசன் அத்தகைய தேவியான உன்னை வாஹனமாகித் தாங்குகிறான். இது நிச்சயம். (37)

सुवर्णनीकाशभवत्प्रतीककान्तेः परिष्वङ्गत एव सार्था।
सुपर्णतेत्यात्मन आकलय्य खगेट् करोत्यम्ब तवाङ्घिसेवाम् || ३८ ||
ஸுவர்ணனீகாஶப⁴வத்ப்ரதீககாந்தே: பரிஷ்வங்க³த ஏவ ஸார்தா² |
ஸுபர்ணதேத்யாத்மன ஆகலய்ய க²கே³ட் கரோத்யம்ப³ தவாங்கி⁴ஸேவாம் || 38 ||


தாயே / ஸுவர்ண (தங்க)த்திற்கீடான மேனியொளி கொண்ட உனது சேர்க்கையால்தான் ஸுபர்ணன் (அழகிய சிறகுள்ளவன்) என்றநிலை தனக்கு நிலைக்கும் எனக் கண்டு பறவையரசன் உன் சரணகமல ஸேவை செய்கிறான். (38)

आगत्य कालाहिधिया हिवेर्णीं गृहीतुकामः खगराण्णिरीक्ष्य ।
निहनोतुमिच्छत्ययमम्ब नैजां भ्रान्तिं त्वदङ्घ्रे परिसेवनात्किम् ||३९ ||
ஆக³த்ய காலாஹிதி⁴யா ஹிவேர்ணீ க்³ரு'ஹீதுகாம: க²க³ராண்ணிரீக்ஷ்ய .
நிஹ்னோதுமிச்ச²த்யயமம்ப³ நைஜாம்' ப்⁴ராந்திம்' த்வத³ங்க்⁴ரே பரிஸேவனாத்கிம் ||39 ||
தாயே! இது கருநாகம் எனக் கருதிப்பறவையரசன் உன் கேசப்பின்னலைப் பிடிக்கவந்தவன் உற்றுப்பார்த்துத் தன் பிரமையை உன் திருவடிசேவையால் மறைக்க விரும்புகிறானோ? (39)
(தொடரும் ...)



# Voice of Jagadguru

advaitam paramanandam — an e-magazine on advaita



ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

# ஸ்ரீமத் அத்யாத்ம ராமாயணம்

## பாலகாண்டம்



### முதலாவது ஸர்கம்

### ஸ்ரீராம ஹ்ருதயம்

ராமன் நடப்பதில்லை; நிற்பதில்லை; கவலைப் படுவதில்லை; விரும்புவதில்லை: கைவிடுவதில்லை; இவ்வளவு ஏன்? எந்தச் செயலையுமே அவர் செய்வதில்லை! அவர் பேரானந்த வடிவினர்; நிலையானவர்; மாறுதலற்றவர். மாயையை ஏற்று, அதனை அனுசரித்து நடப்பதால் அவர் ஒரு சாதாரண மனிதனைப் போல் செயல்படுவதாகக் காணப்படுகிறார் என்பதை நாம் அறிந்து கொள்ளவேண்டும்.

அப்போது, எதிரிலிருந்த ஹனுமானைப் பார்த்து, ராமன் தானே சொன்னார், 'ஆத்மா, அனாத்மா, பரமாத்மா பற்றிய தத்துவத்தைக் கூறுகிறேன், கவனமாகக் கேள் : ஆகாயம், ஒரு தடாகத்தில், மூன்று வித வேற்றுமைகளுடன் காணப்படுகிறது. மஹாகாசம் என்றும், நீரிலிருந்து வேறுபடாத ஓர் ஆகாயமும், அதில் பிரதிபிம்பிக்கும் ஆகாயம் என்ற மற்றொன்றுமாக - மூன்று விதமாக ஆகாயம் தென்படுகிறது. அவ்வாறே, சேதனமும் மூன்று விதமாக விளங்குகிறது. ஒன்று - புத்தியிலிருந்து வேறுபடாத (புத்தியில் வியாபித்திருக்கும்) சேதனன்; இரண்டு எல்லா இடங்களிலும் நிரம்பியுள்ள பரிபூரண சேதனன்; அடுத்தது புத்தியில் பிரதிபிம்பிக்கும் ஒளிவடிவமான ஆபாஸ சேதனன்.

இவற்றில், ஆபாஸ சேதனனுடன் கூடிய புத்திக்குத் தான் கர்த்ருத்வம் (செயல்திறன்) உண்டு. ஆனால், அக்ஞானிகள், குழப்பம் காரணமாக, அவிச்சின்ன நிர்விகார சாட்சியாக உள்ள (நின்று நிலைத்து பிளவுக்கும் மாறுதலுக்கும் உட்படாமல் வெறும் சாட்சியாகவே உள்ள) ஆத்மாவின் மேல் ஏற்றி வைக்கிறார்கள். (ஆத்மாவே தான் செயல்படுகிறது; அனுபவிக்கிறது என்று, தெள்ளிய அறிவு இல்லாதவர்கள் கூறுகிறார்கள்.) எந்த ஆத்மாவை ஜீவன் என்று சொல்கிறோமோ, அந்த ஆபாஸ சேதனன் உண்மையில் இல்லவே இல்லை. (ஏனெனில், எல்லா ஆபாஸ சேதனங்களுமே உண்மையில், இல்லாதவை தான்!) புத்தி என்பது அவித்தையின் காரியம் -என்று சொல்லப்படுகிறது. அந்தப் பரம்பொருளோ, பிளவு படுத்த முடியாதது. (ஒரே பொருளான பரமாத்மா, எல்லா உடல்களிலும்) பிளவுபட்டு, தனித்தனி ஆத்மாவாகத் தோன்றுகிறது என்பதும் வெறும் கற்பனை தான். ஆபாஸத்தோடு, அஹங்காரத்துடன் கூடிய அவிச்சின்னமான சேதனன் (ஜீவன்), 'தத்வமஸி' (நீயே அதுவாக இருக்கிறாய்) முதலிய உபநிடத மஹா வாக்கியங்களால் பூரணமான பரமாதமாவுடன் இணைத்து, (இரண்டும்) ஒன்றே என்று நிரூபிக்கப்படுகிறது. மகாவாக்கியங்களின்


## ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

(ப்ரக்ஞானம் ப்ரஹ்ம; அஹம் ப்ரஹ்மாஸ்மி, தத்வமஸி; அயமாத்மா ப்ரஹ்ம) தத்வானுபவத்தால், ஜீவாத்மாவும் பரமாத்மாவும் ஒன்றே என்ற. ஞானம் ஏற்பட்டவுடன் அக்ஞானமும் அதன் செயல்பாடுகளும் அழிந்து போகின்றன என்பதில் ஐயமில்லை. இந்த உண்மையைப் புரிந்து கொண்டுள்ள என் பக்தன், என்னை அடைவதற்குத் தகுதிபடைத்தவனாகிறான். ஆனால். என்னிடம் பக்திசெலுத்தாமல், சாஸ்திரப் பொந்துகளின் நுழைந்து தவிப்பவர்களுக்கு நூறு பிறவி எடுத்த பின்னாலும் கூட ஞானம் ஏட்படுவதில்லை மோட்சமும் கிடைப்பதில்லை.

குற்றமட்டவனே! ரகசியமான இந்தத் தத்துவம் என்னுடைய ஹ்ருதயம் போன்றது உளக்கு நேரிடையாக என்னாலேயே சொல்லப்பட்டது. எனவே இந்திரப் பதவக்கு மேலான பெரும் பேறு உனக்குக் கிடைப்பதாக இருந்தாலும், என்னிடம் பக்தியில்லாத கசடனுக்கு இந்தத் தத்துவத்தை ஒருபோதும் உபதேசிக்கக் கூடாது. பார்வதிதேவி அப்படிப்பட்ட ஸ்ரீராம் ஹ்ருதயம் (என்ற ஞான விளக்கம்) என்னால் உனக்குச் சொல்லப்பட்டது. இது மிகவும் ரகசியமானது; மனத்தைக் கொள்ளை கொள்வது புனிதமானது பாவத்தை அழிக்கக் கூடியது. எல்லா உபநிஷதங்களின் சாரமாக, சாட்சாத் ராமனால் கூறப்பட்டது. பேரார்வத்துடன் இதைப் படிப்பவன், முக்தியை அடைகிறான் என்பதில் ஐயமில்லை. பல பிறவிகளில் சேர்ந்து வந்துள்ள பிரும்மஹத்தி முதலிய மகாபாவங்கள் கூட (இதைப் படிப்பதால்) அழிந்து விடுகின்றன என்பதில் சந்தேகமில்லை. ஏனெனில், இது ஸ்ரீராமசந்திரனின் ஆணை. முற்றிலுமாக புறக்கணிக்கப்பட்டவன், பெரும்பாவி, மற்றவர்களுடைய பொருள் மற்றும் பிறர் மனைவியிடம் எப்போதும் திளைத்திருப்பவன்; அந்தணரைக் கொன்றவன்; தாய்-தந்தையைக் கொல்லத் துணிந்தவன்: யோகியர்களுக்குக் கேடு செய்தவன் முன்னர் இப்படி இருந்தவர்களும் ஸ்ரீராமசந்திர மூர்த்தியை முழு மனத்துடன் பூஜித்து, ஸ்ரீராமஹ்ருதயத்தைப் பக்தியுடன் படிப்பார்களேயானால், மிகச் சிறந்த யோகிகளாலும் அடைய முடியாததும் எல்லா தேவர்களாலும் கொண்டாடப்படுவதுமான பரமபதத்தை உடனே அடைகிறார்கள்.

உமா மகேசுவரர்களுக்கிடையே நிகழ்ந்த உரையாடலான ஸ்ரீமத் அத்யாத்ம ராமாயணம் பால காண்டத்தில் முதலாவது ஸர்கம் முற்றிற்று. (தொடரும்…)

ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ மஹாஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள்,
ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ ஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ விதுசேகர பாரதீ மஹாஸ்வாமிகள்
அவர்களின் பொற்பாதங்களில் சமர்ப்பிக்கிறோம்